# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1831/9 - 2013 ඔක්තෝබර් මස 08 වැනි අඟහරුවාදා - 2013.10.08

*1831/9 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### *2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டம்*

*2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டத்தின் 12 ஆம் பிரின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.*

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்,
நாயணச் சபையின் தலைவரும்,
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.

கொழும்பு,
*2013, யூலை 26.*

### *2013 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, நிதிக் கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரை*

1. இப்பணிப்புரையானது 2013 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க , நிதிக்கம்பனிகள் (திரவச் சொத்துகள்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் நியதிகளில் உரிமம் பெற்ற ஒவ்வொரு நிதிக் கம்பனிக்கும் ஏற்புடைத்தாத லும் இப்பணிப்புரையின் தொழிற்பாட்டிற்கு வரும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும். எடுத்துக்காட்டல்.

2. 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டத்தின் 74 ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, ஒவ்வொரு நிதிக் கம்பனியும் ஆகக் குறைந்த திரவச் சொத்தொன்றினைப் பேணி வருதல் வேண்டும். இது, எந்தவொரு வேலை நாள் முடிவின் போதும் மொத்தத்தின் பின்வரும் சதவீதத்திற்குக் குறையாததாக இருத்தல் வேண்டும். தவணை வைப்புக் கள் சேமிப்பு வைப்புக்கள் மற்றும் மாற்றல் செய்ய முடியாத வைப்புச் சான்றி தழ்களுக்காக தேவைப்படுத்தப் படும் திரவச் சொத் துக்கள்.

(i) பின்வருவனவற்றில் பத்து (10) சதவீதம் :

(அ) அத்தகைய நாளன்று வியாபாரம் முடிவடைகையில் நிதிக் கம்பனியினால் பெறப்பட்ட தவணை வைப்புக்களினதும் செலுத்தப்படத்தக்க ஒன்று சேர்ந்த வட்டியினதும் வெளிநின்ற பெறுமதியில் ; அத்துடன்

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ஆ) அத்தகைய நாளன்று வியாபாரம் முடிவடைகையில் நிதிக் கம்பனியினால் வழங்கப்பட்ட மாற்றத் தகாத வைப்புச் சான்றிதழின் முகப்புப் பெறுமதி மற்றும் செலுத்தப்படத்தக்க ஒன்று சேர்ந்த வட்டியில் ; அத்துடன்

(ii) அத்தகைய நாளின் வியாபாரம் முடிவடைகையில், அத்தகைய நிதிக் கம்பனியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சேமிப்பு வைப்புக்களினதும் செலுத்தப்படத்தக்க ஒன்று சேர்ந்த வட்டியினதும் வெளிநின்ற பெறுமதியில் பதினைந்து (15) சதவீதம்.

கடன்பாடுகளுக்கான திரவச் சொத்துக்களின் தேவைப்பாடு.

3. பிரிவு (2) இல் உள்ள தேவைப்பாடுகளுக்குப் புறம்பாக, ஒவ்வொரு நிதிக் கம்பனியும் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 74 ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, நிதிக் கம்பனியின் மூலதனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கடன்பாடுகள் மற்றும் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி அத்தகைய கடன்பாடுகளின் மொத்தப் பெறுமதியினை விஞ்சக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு கம்பனியின் ஏதேனும் சொத்துக்களினால் பிணையிடப்பட்ட கடன்பாடுகள் என்பன நீங்கலாக எந்தவொரு நாளிலும் வியாபாரம் முடிவடைகையில், கடன்பாட்டினதும் மற்றும் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் கொடுப்பனவுகளினதும் வெளிநின்ற தொகையில் 2014.01.01 இலிருந்து ஐந்து (5 %) சதவீதமும் 2014.07.01 இலிருந்து பத்து (10) சதவீதமும்.

இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள் இலங்கை அரச பிணையங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்களின் தேவைப்பாடு.

4. 4.1 ஒவ்வொரு நிதிக் கம்பனியும் முற்போந்த நிதியாண்டினது பன்னிரண்டு மாதங்களின் மொத்த வைப்புப் பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளின் தொடர்பில் மாத இறுதியில் காணப்படும் சராசரியில் ஏழரை சதவீதத்திற்குச் (7.5) சமமான தொகையினை எல்லா நேரங்களிலும் இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள், இலங்கை அரச பிணையங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள் என்பனவற்றின் வடிவில் பேணுதல் வேண்டும். இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள், இலங்கை அரச பிணையங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள் என்பனவற்றின் அத்தகைய பிணையங்கள் முதலீட்டு நிதியக் கணக்குப் பயன்பாட்டுக் கணிப்பீட்டிற்குப் பரிசீலனையில் கொள்ளப்படக்கூடாது.

4.2 மேலேயுள்ள பிரிவு 2 மற்றும் 3 இல் குறிப்பிடப்பட்ட இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள், இலங்கை அரச பிணையங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் என்பன மேலேயுள்ள பந்தி 4.1 இல் குறிப்பிடப்பட்ட திரவச் சொத்துக்களின் ஒரு பகுதியினை உள்ளடக்கியதாக இருக்கும்.

4.3 மேலேயுள்ள பந்தி 4. 1 இன் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகும் விதத்தில் நிதிக் கம்பனியொன்றின் வசமுள்ள இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள், இலங்கை அரச பிணையங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் என்பன ஒரு அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அல்லது ஒரு அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட முதனிலை வணிகர் கம்பனிகளின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படல் வேண்டும்.

அறிக்கையிடல்.

5. ஒவ்வொரு நிதிக் கம்பனியும் திரவச் சொத்துக்களை அடுத்துவரும் மாதத்தின் ஏழாம் (7) திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட அறிக்கையிடல் முறைமையூடாக பணிப்பாளருக்கு அறிக்கையிடல் வேண்டும்.

வரைவிலக்கணம்.

6. இப்பணிப்புரையில் -

(i) "தவணை வைப்புக்கள்" என்பது நிதிக் கம்பனிகள் (வைப்புக்கள்) பணிப்புரையின் அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ii) "மொத்த வைப்புப் பொறுப்புக்கள்" என்பது தவணை வைப்புக்களின் வெளிநின்ற பெறுமதி மாற்றல் செய்யமுடியாத வைப்புச் சான்றிதழ்களின் வெளிநின்ற முகப்புப் பெறுமதி மற்றும் சேமிப்பு வைப்புக்களின் வெளிநின்ற பெறுமதி என்பனவற்றை உள்ளடக்குகிறது ;

(iii) "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் எனப் பொருள்படும் ;

(iv) "கடன்பாடுகள்" என்பது தொடர்பான கம்பனிகளுக்கு வரவேண்டிய கடன்கள்/மேலதிகப் பற்றுக்கள் என்பன மூலமாகப் பெறப்பட்ட நிதியம் அல்லது முன்னுரிமைப் பங்குகள், பிணைய மயப்படுத்தல்கள், முறிகள், தொகுதிக் கடன்கள், வாக்குறுதிச் சான்றிதழ்கள், வர்த்தகப் பத்திரங்கள் வரவேண்டிய வேறு ஏதேனும் நிலுவைகள் மற்றும் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்பட்டவாறான வேறு ஏதேனும் விதத்திலமைந்த கடன்பாடுகள் எனப் பொருள்படும் ;

(v) "உரிமம் பெற்ற வர்த்தக வங்கி" என்பது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கி எனப் பொருள்படும் ;

(vi) "முதனிலை வணிகர் கம்பனி " என்பது 195 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் (முதனிலை வணிகர்கள்) கட்டளைச் சட்டம் மற்றும் 1959 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான பதிவு செய்யப்பட்ட பங்குகள் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 420) 55 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள், பிணையங்கள், கட்டளை (முதனிலை வணிகர்) ஒழுங்குவிதிகளின் கருத்துகளுக்குட்பட்ட முதனிலை வணிகர் கம்பனி எனப் பொருள்படும்.

7. 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நிதிக் கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரை இத்தால் நீக்கப்படுகிறது. நீக்கப்படுதல்.

10 - 675

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.